**வாசிக்க**: **எசேக்கியல்** 28:11-19

**தீருவின் அதிபதியா**? **பரலோகத்தின் கேரூபா**? **தள்ளபட்ட இவன் யார்**?

பின்னும் கர்த்தருடைய வார்த்தை எசேக்கியலுக்கு உண்டானது. தீருவின் அதிபதியை குறித்து கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், அவன் விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரைமோதிரம், ஞானத்தால் நிறைந்தவன், பூரண அழகுள்ளவனாக படைக்கபட்டவன். அவன் முதலில் தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தான், பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் அவனை மூடிக்கொண்டிருக்கிறது, அவன் சிருஷ்டிக்கப்பட்ட நாளில் மேளவாத்தியங்களும் நாகசுரங்களும் அவனிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது.

அவன் காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணுப்பட்ட கேருபாக தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் கர்த்தர் வைத்திருந்தார். ஆனால் தன் அழகை அவன் அதிகமாக நேசித்ததால் அவன் இருதயம் மேட்டிமையாயிற்று, அவன் மினுக்கினால் தன் ஞானத்தைக் கெடுத்துகொண்டான், ஆதலால் அவனை கர்த்தர் தரையிலே தள்ளிப்போட்டார். அவனை சிருஷ்டிக்கப்பட்ட நாள்துவக்கி அவனில் அநியாயம் கண்டு பிடிக்கப்பட்டது மட்டும், தன் வழிகளில் குறையற்றிருந்தான். தன் தற்பெருமை அதிகரித்து பாவஞ்செய்ததால், தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேருபாய் இருந்தவனை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழிவுக்கு ஒப்புகொடுத்தார்.

**கேள்வி**:

தேவனுடைய பர்வதத்தில், அக்கினிமயமான கற்களிலிருந்து தள்ளப்பட்ட கேரூப் என்கிறவன் யார்? ஏன் தள்ளபட்டான்?

**பதில்**:

மேற்கண்ட வசனங்கள் தள்ளப்பட்ட கேரூப் தான் சாத்தானாகிய லூசிபர் என தெளிவாக விவரிக்கிறது. அவன் அழகாகவும், ஞானமுள்ளவனாகவும், அற்புதமாகவும் படைக்கப்பட்ட தேவதூதனாகிய கேரூப். தேவனை எப்போதும் ஆராதிக்க தேவதுதர்களின் சேனையை ஆராதனையில் நடத்த ஏற்படுத்தபட்ட ஆராதனைவீரன். ஆண்டவராகிய கர்த்தரையே பார்த்து அவரையே துதித்து

ஆராதித்து கொண்டிருந்தவன், தன் கண்களை தேவனை துதிக்கிற தூதர்கள் பக்கம் திருப்பினான். அவர்கள் தேவனை ஆராதிக்க இவனுடைய கட்டளைக்காக காத்திருப்பதை பார்த்து மனதில் மேட்டிமையானான். இந்த ஆராதனை தனக்கு செலுத்தினால் எப்படி இருக்கும் என இருதயத்தில் யோசித்து பாவம் செய்தபோது பரத்திலிருந்து கீழே தள்ளப்பட்டான். அதன்பின்பு தான் லூசிபராகிய கேரூப் சாத்தானாகி தேவதூதர்கள் மட்டுமல்லாமல் மனிதர்களும் தேவனை விட்டு தன்னை ஆராதிக்க விரும்பி பிசாசாக மாறினான். அன்புள்ள பிள்ளைகளே

உங்கள் அழகுக்காக, அறிவிற்காக வசதிக்காக தேவனை துதித்து நன்றி உள்ளவர்களாக வாழுங்கள். இன்னும் உயராத்தபடுவீர்கள்.

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. யாக்கோபு 4 :6

**ஜெபம்**

சர்வவல்லமையுள்ள தேவனே! இயேசப்பாவின் அன்பினால், இரக்கத்தினால் நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளைகளாயிருக்கிறோம். பெருமை கொள்ள ஒன்றுமில்லை. நன்றியுள்ள பிள்ளைகளாய் இறுதிவரை வாழுவோம். ஆமென்